TRANSLATION

# தமிழ் கற்கை நிலையம், மவுண்ட் ட்ருட் இன்கோர்பரேட்டட் - யாப்பு

| | |
|---|---|
| சுருக்கம் | இந்த யாப்பின் நோக்கமானது, குறிப்பாக, இணைக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வாயிலாக பயனுள்ள மற்றும் திறமையான பாடசாலை நிர்வாக முறைமையை செயற்படுத்துவதற்கு MTSC ஐ ஆதரிப்பதாகும். இந்த வழிகாட்டுதல்கள் ஒரு குழு உறுப்பினர் அல்லது பாடசாலையின் உறுப்பினர் ஒரு விடயத்தை எவ்வாறு சரியாக செய்வது மற்றும் எந்த அளவிற்குச் செய்வது குறித்த விடயங்களைக் காட்டுகின்றது. |
| ஆவண வகை | தமிழ் கற்கை நிலையம், மவுண்ட் ட்ருட் இன்கோர்பரேட்டட் - யாப்பு |
| ஆவண இல. | MTSC2021_002 |
| முதல் வெளியீட்டுத் திகதி | 30 ஆண்டுகளுக்கு முன்னர் (1991) |
| மீளாய்வு, புதுப்பிப்பு மற்றும திருத்தம் | செப்டம்பர் 2021 |
| நிலை | வரைவுப் பதிப்பு |
| ஆசிரியர் | MTSC குழு உறுப்பினர்கள் |
| ஆசிரியர் தொடர்பு விபரம் | mtdruitttsc@gmail.com |
| செயற்பாட்டுக் குழு | MTSC குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் அனைத்து உறுப்பினர்களும் |
| யாருக்குப் பொருந்தும் | MTSC இன் அனைத்து உறுப்பினர்களும் மற்றும் பாடசாலைக்கான பங்களிப்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள அனைவருக்கும் |
| இடுகையிடப்பட்டது | MTSC கூகுள் டிரைவில் |

KHAN Translation
Reg No. W/KT/568
Registered Address
No. 346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-6969432
Email: khantranslation1@gmail.com

## தமிழ் கற்கை நிலையம், மவுண்ட் ட்ரூட் இன்கோர்பரேட்டட்டின் விதிகள்

### விதி 1 பெயர் மற்றும் முகவரி

(i) அமைப்பின் பெயர்,
தமிழ் கற்கை நிலையம், மவுண்ட் ட்ரூட் இன்கோர்பரேட்டட் அல்லது மவுண்ட் ட்ரூட் தமிழ் கற்கை நிலையம் (இதன் பின்னர் "பாடசாலை" என அழைக்கப்படும்).

(ii) பாடசாலையின் அஞ்சல் முகவரி சேவைக் குழுவால் தீர்மானிக்கப்படும்.

(iii) வகுப்புகள் நடாத்தப்படும் இடம்,
Colyton Public School, 43 -81 Nelson Street, Mt Druitt, NSW 2770.

(iv) MTSC இணையதளம் - www.mtsc.org.au
மின்னஞ்சல் - mtdruitttsc@gmail.com
ABN இலக்கம் - 50940494781
கூட்டிணைக்கப்பட்ட இலக்கம் - Y1903918

### விதி 2 குறிக்கோள்கள்

(i) பாடசாலை செல்லும் வயதுடைய குழந்தைகளுக்கு தமிழ் மொழி மற்றும் இலக்கியம் கற்பித்தல்.

(ii) சமூக மற்றும் கலாச்சார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வகையில் நிகழ்வுகளை நடாத்துதல்.

(iii) மதச் சார்பற்ற, அரசியல் சார்பற்ற மற்றும் இலாப நோக்கற்ற சுயாதீன அமைப்பாக செயற்படுதல்.

(iv) தமிழ் கலாச்சாரம் மற்றும் பன்முகக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் மதச் சார்பற்ற, அரசியல் சார்பற்ற மற்றும் இலாப நோக்கற்ற ஏனைய சுயாதீன அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் உதவுதல்.

### விதி 3 அங்கத்துவம்

(i) பாடசாலையில் கற்கும் குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் பாடசாலையின் உறுப்பினர்கள் ஆவர் (இதன் பின்னர் "உறுப்பினர்" என அழைக்கப்படுவர்).

(ii) ஒவ்வொரு உறுப்பினரும் பரிமாற்றம் செய்ய முடியாத ஒரு வாக்குரிமைக்கு தகுதியுடையவராவர்.

KHAN Translation
Reg No. W/KT/548
Registered Address:
No. 346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-0969432
Email: khantranslation1@gmail.com

(iii) இதன் பின்னர் "குழு" என அழைக்கப்படும் செயற்குழு, உறுப்பினராக இல்லாத, ஆனால் இணை உறுப்பினராக பாடசாலையின் அபிவிருத்தியில் ஆர்வமுள்ள எந்தவொரு நபரையும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளலாம்.

(iv) விதி 3 (i) இன் கீழ் உறுப்பினர்களாக தகுதி பெறாத ஆசிரியர்கள் இணை உறுப்பினராக அனுமதிக்கப்படுவார்கள்.

(v) இணை உறுப்பினருக்கு எந்தக் கூட்டத்திலும் வாக்களிக்கும் உரிமை இல்லை, எனினும் குழுக் கூட்டத்தைத் தவிர வேறு எந்தக் கூட்டத்திலும் கலந்துகொள்ளவும், பாடசாலையின் சிறந்த செயற்பாட்டிற்காக எந்தவொரு கருத்தையும் அல்லது ஆலோசனையையும் தெரிவிக்கவும் உரிமை உண்டு.

<u>விதி 4 பணப் பங்களிப்பு</u>

(i) பாடசாலையின் உறுப்பினர் ஒருவர் தனது உறுப்புரிமையைப் பெற்றவுடன், பாடசாலையின் செலவுக்கான பங்களிப்பாக குழுவால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகையை மாதந்தோறும் அல்லது காலாண்டு அல்லது ஆண்டுக்கு இருமுறை அல்லது ஆண்டுக்கு ஒருமுறை பாடசாலைக்கு செலுத்த வேண்டும். நிதிச் சிக்கல்களை எதிர்கொள்ளும் உறுப்பினர்களுக்கு குழுவால் விலக்கு அளிக்கப்பட முடியும். அத்தகைய விலக்கு அளிக்கப்படவேண்டிய தேவையுடைய உறுப்பினர்கள் தமது கோரிக்கையை எழுத்துபூர்வமாக குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், செலுத்த வேண்டிய ஏதேனும் கட்டண மிகுதிகள், உறுப்பினரிடமிருந்து பாடசாலைக்குச் சேர வேண்டிய நிறுவையாகக் கருதப்படும்.

<u>விதி 5 உள்ளகப் பிணக்குகளுக்கான தீர்வு</u>

(i) தமக்கு இடையே பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பில் எழும் எந்தவொரு பிணைக்கையும் மத்தியஸ்தம் செய்வதற்காக, உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள் அது குறித்து குழுவிற்கு தெரியப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், பாடசாலையின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் பிணக்குகள் குறித்த எந்த விதமான கலந்துரையாடல்களையும் அவர்கள் தொடரக்கூடாது.

<u>விதி 6 உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்களின் ஒழுக்காற்று</u>

(i) பாடசாலையின் உறுப்பினர் அல்லது இணை உறுப்பினர் ஒருவர் விதிகளின் ஏற்பாடு அல்லது ஏற்பாடுகளுக்கு இணங்குவதற்கு தொடர்ச்சியாக மறுத்துள்ளார் அல்லது புறக்கணித்துள்ளார் என குழு கருதினால், தீர்மானத்தின் மூலம், குழு:

(அ) உறுப்பினரை பாடசாலையின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தலாம் (குறிப்பிட்ட காலத்திற்கு) அல்லது வெளியேற்றலாம், இருப்பினும் குழந்தை / குழந்தைகள் பாடசாலைக்கு வருகை தருவதற்கு குழு அனுமதியளிக்கும்.

KHAN Translation
Reg No. W/RT/548
Registered Address: No. 346-1/1, Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-9969432
E-mail: khantranslation1@gmail.com

(ஆ) ஒரு இணை உறுப்பினரை பாடசாலையிலிருந்து வெளியேற்றலாம்.

(ii) விதி 6 (i) இன் கீழ் குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் பட்சத்தில், அது குறித்து செயலாளர் முடிந்தவரை விரைவாக உறுப்பினருக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கி எழுத்துபூர்வமான அறிவித்தலை வழங்க வேண்டும்.

(அ) குழுவின் தீர்மானத்தையும், அதற்கு அடிப்படையாக அமைந்த அமைந்த காரணத்தையும் குறிப்பிடுதல்

(ஆ) 14 நாட்களுக்கு முன்னதாகவும், அறிவித்தல் அனுப்பப்பட்ட 28 நாட்களுக்குப் பின்னரும் நடைபெறும் கூட்டத்தில் உறுப்பினர் குழுவில் உரையாற்றலாம் எனக் குறிப்பிடுதல்

(இ) கூட்டத்தின் திகதி, இடம் மற்றும் நேரத்தைக் குறிப்பிடுதல் மற்றும்

(ஈ) உறுப்பினர் பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது இரண்டையும் செய்யலாம் என உறுப்பினருக்குத் தெரிவித்தல்:

(அ) கூட்டத்தில் பங்கேற்று பேசுதல், மற்றும் / அல்லது

(ஆ) தீர்மானம் தொடர்பான எழுத்துபூர்வ பிரதிநிதித்துவங்களை அந்தக் கூட்டத்தின் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பித்தல்

(iii) விதி 6 (iii) இன் கீழ் உறுப்பினருக்கு அறிவித்தல் அனுப்பிய 14 நாட்களுக்கு முன்னரும், 28 நாட்களுக்குப் பின்னரும் கூடாத கூட்டமொன்றில், இந்த விதியின்படி தீர்மானத்தை குழு உறுதி செய்யாவிட்டால், விதி 6 (i) இன் கீழான குழுவின் தீர்மானம் எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

(iv) விதி 6 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடைபெற்ற குழுவின் கூட்டத்தில், குழு,

(அ) உறுப்பினருக்கு வாய்மொழி ரீதியான சமர்ப்பணமொன்றைச் செய்ய சந்தர்ப்பம் வழங்கலாம்,

(ஆ) கூட்டத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ உறுப்பினரால் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு சமர்ப்பணத்தையும் உரிய வகையில் பரிசீலனை செய்யலாம், மற்றும்

(இ) தீர்மானத்தை உறுதிப்படுத்துவதா அல்லது திரும்பப் பெறுவதா என்பதை தீர்மானமொன்றின் மூலம் முடிவு செய்யலாம்.

(v) விதி 6 (iv) இன் கீழ் தீர்மானமொன்றை குழு உறுதிப்படுத்தும் பட்சத்தில், அந்த உறுதிப்படுத்தலுக்குப் பின்னர் 7 நாட்களுக்குள், தீர்மானத்தின் முடிவை உறுப்பினருக்கு எழுத்துபூர்வ அறிவித்தல் மூலம் செயலாளர் தெரியப்படுத்துதல் வேண்டும்.

KHAN Translation
Reg No. W/HT/540
Registered Address:
No. 160-1/1,
Galle Rd Mount Lavinia.
(+94) 77-9822069
(+94) 77-9969832

(vi) குழுவின் உறுப்பினர் உள்ளடங்கலாக பாடசாலையின் உறுப்பினர் ஒருவரின் முறையற்ற நடத்தைக்கான ஒழுக்காற்றுக் கடிதத்தை வழங்குவதற்காக, செயலாளர் குறைந்தபட்சம் 2/3 அளவான குழு உறுப்பினர்களின் அங்கீகாரம் அல்லது ஒப்புதலை பெறுதல் வேண்டும்.

<u>விதி 7 முகாமைத்துவம்</u>

(i) வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் குழுவால் பாடசாலை நிர்வகிக்கப்படும்.

(ii) டிசம்பரில் பாடசாலைப் பருவத்தின் இறுதி வாரத்தில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

(iii) யாப்பு மற்றும் உறுப்புரிமை

குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்:

- (அ) பாடசாலையின் நிறைவேற்று உறுப்பினர்கள்,
- (ஆ) அதிபர், துணை அதிபர், மற்றும்
- (இ) 12 சாதாரண உறுப்பினர்கள்

நிறைவேற்று உறுப்பினர்கள் மற்றும் சாதாரண உறுப்பினர்கள் ஆண்டுதோறும் பாடசாலையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் விதி 8 இற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவதுடன், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உறுப்பினர்களில் 2/3 பேரால் MTSC இன் உறுப்பினர்கள் அல்லது ஆசிரியர்களிலிருந்து அதிபர் மற்றும் துணை அதிபர் பரிந்துரைக்கப்படலாம்.

(iv) பாடசாலையின் நிறைவேற்று உறுப்பினர்கள்:

- (அ) தலைவர்,
- (ஆ) பிரதித் தலைவர்,
- (இ) பொருளாளர்,
- (ஈ) உதவிப் பொருளாளர்,
- (உ) செயலாளர், மற்றும்
- (ஊ) உதவிச் செயலாளர்

(v) வருடாந்த பொதுக் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளால் குழுவில் மேலதிக பதவிகளை குழு உருவாக்கலாம்.

(vi) இந்த விதிக்கு உட்பட்டு, குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் அவர் தெரிவு செய்யப்பட்ட திகதி முதல் வருடாந்த பொதுக் கூட்டம் முடிவடையும் வரை பதவி வகிக்க வேண்டும், எனினும் விதி 8 (ii) (ஊ) இற்கு அமைவாக அவர் மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதி பெறலாம்.

KHAN Translation
Reg No. W/BT/548
Registered Address:
No. 344-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-5422869
(+94) 77-9969432
E-mail: khantranslation1@gmail.com

(vii) குழுவின் எந்த உறுப்பினரும் 14 நாட்களுக்கு முன்னரான எழுத்துமூர்வ அறிவித்தலை வழங்காது இராஜினாமா செய்யக்கூடாது.

(viii) எந்தவொரு சரியான காரணமும் இன்றி தொடர்ச்சியாக மூன்று குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தவறிய எந்தவொரு குழு உறுப்பினரினதும் பதவி வெற்றிடமாகியுள்ளதாகக் கருதப்படும்.

(ix) குழுவின் அங்கத்துவத்தில் சாதாரணமான வெற்றிடம் ஏற்பட்டால், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக பாடசாலையின் உறுப்பினர் ஒருவரை குழு நியமிக்கலாம் என்பதுடன், அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர், நியமனத் திகதியைத் தொடர்ந்து அடுத்த வருடாந்த பொதுக் கூட்டம் நிறைவடையும் வரை, இந்த விதிக்கு உட்பட்டு பதவியில் இருப்பார்.

(x) நிறைவேற்று உறுப்பினராக இருப்பதற்கான தகைமை -

i. கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ச்சியாக குழுவின் உறுப்பினராகவிருத்தல்
ii. பெரும்பாலான கூட்டங்களில் பங்கேற்றல்
iii. கடந்த 2 ஆண்டுகளில் பாடசாலைக்கு பங்களிப்புச் செய்திருத்தல்

**<u>விதி 8 குழுவிற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்</u>**

(i) விதி 3 க்கு இணங்க வாக்களிக்கத் தகுதி பெற்ற பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழுவில் (அல்லது ஏதேனும் துணைக் குழுவில்) பணியாற்ற வேண்டும், எனினும் ஒரு குழுவில் பணியாற்றும் ஏனைய பெற்றோரின் (தாய் / தந்தை) உரிமையை அது கட்டுப்படுத்தாது. இருப்பினும், இரு பெற்றோர்களும் ஒரே குழுவில் பணியாற்றக் கூடாது.

(ii) குழு உறுப்பினர்களின் தேர்தலுக்கான வேட்பாளர்களின் நியமனங்கள்:

(அ) அனைத்து பெற்றோர்களுக்கும் 4வது தவணையில் செய்திமடலுடன் நியமனப் படிவம் வழங்கப்படுவதுடன், படிவங்கள் வழங்கப்பட்ட 2 வாரங்களுக்குள் வேட்புமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளாகும். பெறப்பட்ட வேட்புமனுக்கள் குறித்து ஆலோசிப்பதற்காக, வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு 2 வாரங்களுக்கு முன்னதாக விஷேட குழுக் கூட்டத்திற்கு செயலாளர் அழைப்பு விடுக்க வேண்டும். வேட்புமனுக்கள் எழுத்துமூர்வமாக பாடசாலையின் 2 உறுப்பினர்களால் கைச்சாத்திடப்பட்டு பாடசாலையின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும்.

(ஆ) குழுவில் உள்ள அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்குப் போதுமான வேட்புமனுக்கள் பெறப்படாவிட்டால், வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த அனைத்து வேட்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்பதுடன், மேலதிக வேட்புமனுக்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பெறப்படும்.

(இ) போதிய அளவு வேட்புமனுக்கள் பெறப்படாவிட்டால் மற்றும் விதி 8 (ii) (ஈ) இன் படி பரிந்துரைகள் பெறப்படாவிட்டால், குழுவில்



KHAN Translation
Reg No. W/RT/548
Registered Address:
No. 346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-9909432
Email: khantranslation1@gmail.com

எஞ்சியிருக்கும் வெற்றிடங்கள் சாதாரண வெற்றிடங்களாகக் கருதப்படும்,

(ஈ) பெறப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருந்தால், குறிப்பிட்ட பதவிக்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

(உ) பெறப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தால், வருடாந்த பொதுக் கூட்டத்தில் வழக்கமான மற்றும் முறையான முறையில் வாக்கெடுப்பு நடாத்தப்படும்.

(ஊ) கடந்த காலத்தில் பாடசாலைக் குழுவில் இருந்த ஒரு வேட்பாளரின் நியமனம், வருடாந்த பொதுக் கூட்டத்தில் போதுமான அளவு பரிந்துரைகள் பெறப்படாவிட்டால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(எ) தேர்தலுக்கான வருடாந்த பொதுக் கூட்டத்தில் வேட்பாளர் கலந்து கொள்ள வேண்டும்.

(ஏ) ஒழுக்கமற்ற உறுப்பினரின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

<u>விதி 9 கூட்டம் மற்றும் கோரம்</u>

பொதுக் கூட்டங்கள்:

(i) வருடாந்த பொதுக் கூட்டம் ஒவ்வொரு நாட்காட்டி ஆண்டிலும் டிசம்பர் மாதத்தில் ஆண்டு இரவு உணவு தினத்தில் நடைபெறும்.

(ii) மொத்த வாக்களிக்கும் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதியினர் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கும் விஷேட பொதுக் கூட்டத்திற்கும் கோரமாக இருக்க வேண்டும்.

(iii) கூட்டம் தொடங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அரை மணி நேரத்திற்குள் கோரம் இல்லை எனில், கூட்டம் ஏழு நாட்களுக்குப் பின்னர் அதே நேரத்தில் அதே இடத்தில் நடைபெறும் வகையில் ஒத்திவைக்கப்படும். அத்தகைய ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் கோரம் இல்லை எனில், அன்று பிரசன்னமாகியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றுக்குக் குறையாமல் இருக்கும்பட்சத்தில், அந்த உறுப்பினர்கள் கோரமாக கருதப்படுவார்கள்.

(iv) வருடாந்த பொதுக் கூட்டத்தில்:

(அ) தலைவர் முந்தைய ஆண்டு நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்,

(ஆ) பொருளாளர் முந்தைய ஆண்டின் நிதிப் பரிவர்த்தனைகளின் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்,



KHAN Translation
Reg No. W/RT/648
Registered Address:
No. 346-1/L
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9421069
(+94) 77-9969432
E-mail: khantranslation1@gmail.com

(இ) தலைவர் மற்றும் குழுவின் ஏனைய இரண்டு உறுப்பினர்கள் தேர்தலை நடத்துவார்கள்,

(ஈ) குழுவில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக தேர்தல் நடாத்தப்படும்,

(உ) ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் விபரங்கள் குறிப்பிடப்படாமல் தேர்தல் முடிவு தலைவரால் அறிவிக்கப்படும்,

(ஊ) புதிதாக தெரிவு செய்யப்பட்ட குழு எதிர்வரும் புத்தாண்டில் கடமைகளை பொறுப்பேற்கும், மற்றும்

(எ) பாடசாலை கூட்டிணைக்கப்பட்ட அமைப்பாக இருந்தால் கணக்காய்வாளர் நியமிக்கப்படுவார்.

(v) 9 (v) (அ) அல்லது (ஆ) விதியின்படி கோரிக்கை செய்யப்பட்ட முப்பது (30) நாட்களுக்குள் குழுவின் செயலாளரால் ஒரு விஷேட பொதுக் கூட்டம் அழைக்கப்படலாம்:

(அ) அத்தகைய கூட்டத்திற்கான காரணங்களை எழுத்துபூர்வமாக குறிப்பிட்டு, ஏதேனும் ஐந்து குழு உறுப்பினர்கள் கோரிக்கை செய்தல்,

(ஆ) பொது உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் (1/3) அத்தகைய கூட்டத்திற்கான காரணங்களை எழுத்துபூர்வமாக குறிப்பிட்டு கோரிக்கை செய்தல், மற்றும்

(இ) விஷேட கூட்டத்திற்கான அறிவித்தல், அத்தகைய கூட்டத்திற்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னதாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படல்.

(vi)

(அ) நிறைவேற்றுக் குழு ஒரு பாடசாலை ஆண்டில் மாதத்திற்கு ஒருமுறை கூடும் என்பதுடன், தேவைப்பட்டால் மேலதிக கூட்டங்கள் அழைக்கப்படும்,

(ஆ) குழுவின் கூட்டம் குறித்த வாய்மொழி ரீதியான அல்லது எழுத்துபூர்வ அறிவித்தல், கூட்டத்தை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு குறைந்தது 48 மணிநேரத்திற்கு முன்னதாக செயலாளரால் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும்,

(இ) ஒரு குழுக் கூட்டத்தின் வணிகத்தின் பரிவர்த்தனைக்கு குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் கோரமாக இருத்தல் வேண்டும்.

(ஈ) குழுக் கூட்டமொன்றில்:

(அ) தலைவர் அல்லது, தலைவர் இல்லாத நிலையில், துணைத் தலைவர் தலைமை தாங்குவார், அல்லது

(ஆ) தலைவர் மற்றும் துணைத் தலைவர் இல்லாதிருந்தால் அல்லது அவ்வாறு செயற்பட விரும்பவில்லையாயின், குழுவின் மீதமுள்ள



KHAN Translation
Reg No. W/RT/548
Registered Address
No. 346-1/1,
Galle Rd, Mount. Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-9969432
Email: khantranslation1@gmail.com

உறுப்பினர்களில் ஒருவரை கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்காக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கலாம்.

**விதி 10 தீர்மானங்களை மேற்கொள்ளுதல்**

(i) பாடசாலையின் பொதுக் கூட்டத்தில் எழும் கேள்விகளுக்கு கைகளை உயர்த்துவதன் மூலம் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். சமமான வாக்குகள் பெறப்பட்டால், தலைமை வகிக்கும் நபர் இரண்டாவது முறையாக அதனை நடாத்தலாம் அல்லது அவர் வாக்களிக்கலாம்.

(ii) குழுக் கூட்டத்தில் அல்லது ஏதேனும் துணைக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்ட குழு அல்லது துணைக் குழுவின் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் கேள்வி எழும் போது,

(அ) குழு அல்லது துணைக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்குரிமை உண்டு.

(ஆ) ஒரு துணைக் குழுவின் கூட்டத்தில் ஏதேனும் கேள்விகளைத் தீர்மானிப்பது குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

**விதி 11 நிறைவேற்றுக் குழுவின் கடமைகள்**

(i) இந்த விதிகளுக்கும் மற்றும் பாடசாலை பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானத்திற்கும் உட்பட்டு, குழு பின்வருவனவற்றைச் செய்யலாம்:

(அ) பாடசாலையின் விவகாரங்களைக் கட்டுப்படுத்தி நிர்வகித்தல்,

(ஆ) பாடசாலையின் உறுப்பினர்களின் பொதுக் கூட்டத்தால் செயற்படுத்தப்பட வேண்டிய இந்த விதிகளின்படி தேவைப்படும் செயற்பாடுகளைத் தவிர, பாடசாலையால் செயற்படுத்தக்கூடிய அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல், மற்றும்

(இ) பாடசாலையின் விவகாரங்களை முறையாக நிர்வகிப்பதற்குத் தேவையானதாக அல்லது விரும்பத்தக்கதாக குழுவுக்குத் தோன்றும் அனைத்து விடயங்களையும் செய்யும் அதிகாரம் உள்ளது.

(ii) கீழ்க்கண்டவற்றைத் தவிர, குழுவின் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக துணைக் குழுக்களையும் பிரதிநிதிகளையும் குழு நியமிக்கலாம்,

(அ) இந்த அதிகாரத்தை வழங்குதல், மற்றும்

(ஆ) சங்கக் கூட்டிணைப்புச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தால் குழுவிற்கு விதிக்கப்படும் கடமையான ஒரு செயற்பாடு கூட்டிணைக்கப்பட்டிருந்தால்.

(iii) விதி 11 (ii) இன் படி பின்வரும் முக்கிய துணைக்குழு நியமிக்கப்படலாம்.

KHAN Translation
Reg No. W/RT/540
Registered Address: No. 344-1/1, Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9432869
(+94) 77-9969452
E-mail: khantranslation1@gmail.com

(அ) குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் மற்றும் அதிபரின் தலைமையில் மூன்று (3) அல்லது அதற்கு மேற்பட்டவர்களை கல்வி துணைக் குழு கொண்டிருக்கும். இந்தக் குழுவில், அதிபர் குறைந்தபட்சம் 2 ஆசிரியர்களையாவது உதவிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இந்தக் குழு பின்வருவனவற்றிற்கு பொறுப்பாகும்:

i. பாடசாலைக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்,
ii. பாடசாலையில் ஒழுக்கங்களைப் பேணுதல்,
iii. தேவைப்பட்டால் பாடத்திட்டத்தை மீளாய்வு செய்தல்,
iv. கற்பித்தல் பொருட்களை உருவாக்குதல்,
v. வகுப்பிலிருந்து வகுப்பிற்கு மாணவர் மாற்றப்படுவதைத் தீர்மானித்தல்,
vi. ஆசிரியர்களின் பணியை ஒருங்கிணைத்தல்,
vii. குழந்தைகளின் தமிழ் மொழித் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்,
viii. பொதுவான கல்வி விடயங்களில் ஏனைய தமிழ் பாடசாலைகள் மற்றும் தொடர்புடைய அமைப்புக்களுடன் ஒருங்கிணைத்தல், மற்றும்
ix. இந்த துணைக் குழுவின் தலைவரினூடாக ஆசிரியர்களின் கருத்துக்களை குழுவிடம் தெரிவித்தல்,
x. அமைச்சர் விருதுக்கான மாணவர்களின் பரீட்சையை நடாத்தி இறுதி செய்தல்,
xi. பேச்சுப் போட்டிக்கு ஏற்பாடு செய்தல்.

(ஆ) குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் கலாச்சார துணைக் குழு, துணைத் தலைவரின் தலைமையில் மூன்று (3) அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் என்பதுடன், அது பின்வருவனவற்றிற்கு பொறுப்பாகும்:

i. கச்சேரி மற்றும் ஏனைய கலாச்சார நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்,
ii. பல்வேறு பொதுவான கலாச்சார நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதில் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல், மற்றும்
iii. துணைக் குழுவால் தீர்மானிக்கப்பட்ட செய்திமடலை வழக்கமான அடிப்படையில் அச்சிடுதல்.

(இ) வேறு ஏதேனும் துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டால், அத்தகைய துணைக் குழுக்களுக்குத் தலைமை தாங்குவதற்காக, குழுவின் உறுப்பினர்களையோ அல்லது பாடசாலையின் உறுப்பினர்களையோ குழு நியமிக்கும்.

(ஈ) குழுவின் ஒப்புதல் இன்றி துணைக் குழுவின் ஆலோசனைகள் செயற்படுத்தப்பட மாட்டாது என்பதுடன், துணைக் குழுவிற்குத் தலைமை

KHAN Translation
Reg No. W/RZ/540
Registered Address:
No. 346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9622869
(+94) 77-9969432
E-mail: khantranslation1@gmail.com

தாங்கும் உறுப்பினர், குழுவின் அடுத்த கூட்டத்தில் அத்தகைய ஒப்புதலைப் பெற வேண்டும்.

**விதி 12 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் கடமைகள்**

(i) தலைவரின் முக்கிய கடமைகள்:

(அ) பொது மற்றும் குழுக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல்,

(ஆ) வகுப்புக்கள் நடாத்தப்படும் பாடசாலையின் அதிபருடன் தங்குமிடம் போன்ற விடயங்கள் குறித்து ஒருங்கிணைத்தல்,

(இ) மவுண்ட் ட்ரூட் தமிழ் கற்கை நிலையத்தின் ஒருங்கிணைப்புக் குழுவில் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்துதல்,

(ஈ) பாடசாலையின் அன்றாட நிர்வாகத்தில் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்,

(உ) குழுவால் பரிந்துரைக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள், அனைத்து தொடர்ச்சியான கொடுப்பனவுகள் மற்றும் அதிகபட்சமாக $ 250.00 (இருநூற்று ஐம்பது டொலர்கள்) வரையிலான பொருளாளரால் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளைத் தவிர ஏனைய கொடுப்பனவுகளை அங்கீகரித்தல், மற்றும்

(ஊ) வங்கிக் கணக்கில் கைச்சாத்திடும் நபர்களில் ஒருவராக செயற்படல், மற்றும்

(எ) அலுவலக செயற்பாடுகளில் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

(ii) பிரதித் தலைவரின் முக்கிய கடமைகள்:

(அ) தலைவரின் பணிகளில் அவருக்கு உதவுதல்,

(ஆ) தலைவர் இல்லாத போது பொது மற்றும் குழுக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல், மற்றும்

(இ) கலாச்சார துணைக் குழுவின் தலைவராக செயற்படுதல்.

(iii) செயலாளரின் முக்கிய கடமைகள்:

(அ) அஞ்சலைச் சேகரித்து, தேவைப்பட்டால் அதை பிரதியெடுத்து, சரியான முறையில் விநியோகித்தல்,

(ஆ) பொது மற்றும் குழுக் கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரலின் விடயங்களை அறிவித்தல்,

KHAN Translation
Reg No. W/RT/548
Registered Address:
No. 346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-9969452
Email: khantranslation1@gmail.com

(இ) கூட்டங்களின் அறிக்கைகளை எடுத்து அடுத்த கூட்டத்திற்கு முன்னர் அவற்றை குழுவிற்கு விநியோகித்தல்,

(ஈ) பாடசாலைப் பதிவுகள், உறுப்பினர் பட்டியல்கள், மாணவர் பட்டியல்கள் போன்றவற்றுக்கு பொறுப்பாக செயற்படுதல்,

(உ) படிவங்களைப் பூர்த்தி செய்து, தேவைப்படும் போதெல்லாம் அரசாங்கத்திற்கு தகவல்களை வழங்குதல்,

(ஊ) பாடசாலையின் விவகாரங்கள் தொடர்பான விடயங்களில் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடன் தொடர்புகொள்ளுதல்,

(எ) வங்கிக் கணக்கில் கைச்சாத்திடும் நபர்களில் ஒருவராக செயற்படல்,

(ஏ) தேவைப்பட்டால், உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்துதல், மற்றும்

(ஐ) பாடசாலை கூட்டிணைக்கப்பட்டிருந்தால், சங்கத்தின் கூட்டிணைப்புச் சட்டத்தின்படி தேவைப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

(iv) உதவிச் செயலாளரின் முக்கிய கடமைகள்:

(அ) செயலாளருக்கு உதவுதல்,

(ஆ) சிற்றுண்டி விருந்துப் பட்டியலை ஒருங்கிணைத்தல்,

(இ) ஆண்டு இரவு உணவு மற்றும் ஏனைய பாடசாலை நடவடிக்கைகளுக்கு பெற்றோரின் உதவியுடன் உணவுப் பொருட்களை ஒழுங்கமைத்தல்.

(v) பொருளாளரின் முக்கிய கடமைகள்:

(அ) நிதி துணைக் குழுவின் தலைவராக செயற்படுதல்,

(ஆ) குழுவால் தீர்மானிக்கப்பட்ட பாடசாலைக்கான பொருட்களை சரியான நேரத்தில் கொள்வனவு செய்வதற்குப் பொறுப்பாக செயற்படுதல்,

(இ) அதிகபட்சமாக $ 250.00 (இருநூற்று ஐம்பது டொலர்கள்) வரை செலவினங்களை அங்கீகரித்தல்,

(ஈ) உறுப்பினர்களிடமிருந்து பணப் பங்களிப்புகளைப் பெறுதல் மற்றும் பற்றுச்சீட்டுக்களை வழங்குதல்,

(உ) செலுத்த வேண்டிய / பெற வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் மாதாந்த அடிப்படையில் நிலுவைத் தொகை உட்பட நிதிப் பரிவர்த்தனைகளின் சுருக்கத்தை மாதாந்த குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல்,

KHAN Translation
Reg No. W/HT/548
Registered Address:
No.346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-9969437
Email: khantranslation1@gmail.com

(ஊ) வருடாந்தக் கணக்குகள் (பாடசாலை கூட்டிணைக்கப்பட்டிருந்தால் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள் அவசியம்) மற்றும் முன்னறிவிக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவு அறிக்கையை வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல், மற்றும்

(எ) வங்கிக் கணக்கில் கைச்சாத்திடும் நபர்களில் ஒருவராக செயற்படல்.

(vi) உதவிப் பொருளாளரின் முக்கிய கடமைகள்:

1. பொருளாளருக்கு உதவுதல்.
2. நிதி தொடர்பான அனைத்து கடமைகளையும் தேவைப்படும்போது நிறைவேற்றுதல்.

(vii) அதிபரின் முக்கிய கடமைகள்:

(அ) கல்வி துணைக் குழுவிற்கு அதிபர் தலைமை தாங்குதல், மற்றும் ஏனைய துணைக் குழுக்களின் உறுப்பினராக செயற்படல்,

(ஆ) பாடசாலையின் கற்பித்தல் வளங்களைப் பயன்படுத்துவதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக செயற்படல்,

(இ) தேவைப்பட்டால், உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்துதல்,

(ஈ) அனைத்து ஆசிரியர்களாலும் வளங்கள் பகிரப்படுவதை ஒருங்கிணைத்தல்,

(உ) புத்தகம் கொள்வனவு செய்ய வேண்டியதன் அவசியத்தை குழுவிற்கு பரிந்துரைத்தல்,

(ஊ) மவுண்ட் ட்ரூட் தமிழ் கற்கை நிலையத்தின் ஒருங்கிணைப்புக் குழுவில் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்துதல்,

(எ) ஆசிரியர் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல், மற்றும்

(ஏ) புதிய குழந்தைகளுக்கு வகுப்புகளை ஒதுக்குதல்.

(viii) துணை அதிபரின் முக்கிய கடமைகள்:

(அ) அதிபருக்கு உதவுதல்

<u>விதி 13 நிதி விடயங்கள்</u>

(i) "மவுண்ட் ட்ரூட் தமிழ் கற்கை நிலையம்" என்ற பெயரில் பாடசாலை வங்கிக் கணக்கைப் பராமரிக்க வேண்டும்,

KHAN Translation
Reg No. W/RT/148
Registered Address: No. 346-1/1, Galle Rd, Mount Lavinia.
(+94) 77-6422869
(+94) 77-9969433
Email: khantranslation1@gmail.com

(ii) பொருளாளர், தலைவர் அல்லது செயலாளர் மற்றும் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஏனைய உறுப்பினர் ஆகியோரே வங்கிக் காசோலையில் கையொப்பமிடும் நபர்களாவர்,

(iii) பாடசாலையின் நிதி ஆண்டு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ஆந் திகதி நிறைவடையும்,

(iv)

(அ) பாடசாலை மூடப்படும் பட்சத்தில், எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் பெறப்பட்ட மானியங்களின் மீதியைத் தவிர மீதமுள்ள அனைத்து நிதிகளும், பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டபடி விநியோகிக்கப்படும், மற்றும்

(ஆ) பாடசாலைக்கு மானியங்கள் வழங்கிய நிறுவனங்களுக்கு ஏதேனும் மானியத்தின் மீதமுள்ள அனைத்து நிதியும் மீள வழங்கப்படும்.

(v)

(அ) கணக்காய்வாளர் கணக்கியல் பதிவேடுகளையும், பொருளாளரால் தயாரிக்கப்பட்ட ஆண்டு கணக்கு அறிக்கையையும் கணக்காய்வு செய்து சான்றளிக்க வேண்டும்.

(ஆ) MTSC நிலையத்திற்கு சுயாதீனமான கணக்காய்வாளர் 2/3 குழு உறுப்பினர்களால் நியமிக்கப்படுவார்.

<u>விதி 14 விதிகளுக்கான திருத்தங்கள்</u>

(i) இந்த விதிகள் பொதுக் கூட்டத்தால் மட்டுமே திருத்தப்படும்,

(ii) பொதுக் கூட்டத்திற்கு நான்கு வாரங்களுக்கு முன்னர் உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் குறித்து உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும், மற்றும்

(iii) இந்த விதிகளில் மேற்கொள்ளப்படும் மாற்றம் பொதுக் கூட்டத்தில் இருக்கும் உறுப்பினர்களால் 75% பெரும்பான்மை வாக்குகளால் மட்டுமே செயற்படுத்தப்படும்,

<u>விதி 15 பொது முத்திரை</u>

(i) பாடசாலையின் பொது முத்திரை கூட்டிணைக்கப்பட்டிருந்தால், அது செயலாளரின் பாதுகாப்பில் வைக்கப்படல் வேண்டும்,

(ii) குழுவின் அதிகாரத்தால் தவிர எந்த ஒரு ஆவணத்திலும் பொது முத்திரை பொறிக்கப்பட மாட்டாது மற்றும் பொது முத்திரையை பொறிப்பது குழுவின் இரு உறுப்பினர்கள் அல்லது குழுவின் ஒரு உறுப்பினர் மற்றும் செயலாளரின் கையொப்பங்களால் சான்றளிக்கப்படும்.

KHAN Translation
Reg No. W/RT/548
Registered Address:
No. 346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422069
(+94) 77-9969432
E-mail: khantranslation1@gmail.com

**விதி 16 காப்புறுதி**

(i) பாடசாலை சட்டத்தின் பிரிவு 44 இன் படி காப்புறுதியை செயற்படுத்தி பராமரித்தல் வேண்டும்.

(ii) விதி 16 (i) இன் கீழ் தேவைப்படும் காப்புறுதிக்கு மேலதிகமாக பாடசாலை ஏனைய காப்புறுதியை செயற்படுத்தலாம் மற்றும் பராமரிக்கலாம்.

**விதி 17 புத்தகங்கள் முதலியவற்றை ஆய்வு செய்தல்**

(i) முன் எழுத்துமூர்வ கோரிக்கையின் பேரில், பாடசாலையின் பதிவுகள், புத்தகங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை பாடசாலையின் உறுப்பினர் ஒருவர் பாடசாலை நேரத்தில் இலவசமாக ஆய்வு செய்யலாம்.

- முடிவு -

இது எனக்கு கையளிக்கப்பட்ட ஆங்கில ஆவணத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு என உறுதிப்படுத்துகின்றேன்.

SR

KHAN Translation
Reg No. W/07/548
Registered Address
No. 346-1/1,
Galle Rd, Mount Lavinia.
(+94) 77-9422869
(+94) 77-9969432
E-mail: khantranslation1@gmail.com

TRANSLATED BY ME

A. SHIHAARA SHAFEEQ KHAN LL.B (Hons), BA
Government Approved Sworn Translator
(Sinhala - Tamil - English) 06/12/2024
Authorized by the Ministry of Justice of Sri Lanka
(Reg.No: 2016/LL/CO/005)
'KHAN Translation', No. 156-A/4,
Hulftsdorp Street, Colombo 12, Sri Lanka.
Tel: 077 9422869